Register No. | | | | | | | | |

**FA5A**

**6902–25**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

INDIAN PUBLIC ADMINISTRATION

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Write an essay on Public and Private Administration.

   பொதுத்துறை மற்றும் தனியார்துறை ஆட்சிமுறை குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

2. What are the bases of an organisation?

   அமைப்பு முறையின் அடிப்படைகள் யாவை?

3. Examine the functions of Chief Executive.

   முதன்மை மேலாண்மையரின் பணிகளை ஆராய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the types of management in administration?

   நிர்வாகத்திலுள்ள மேலாண்மையின் வகைகள் யாவை?

5. Write an essay about Human Relations theory.

   மனித உறவுகள் கோட்பாடு பற்றி ஒரு கட்டுரை வரைக.

6. Explain the salient features of the Right to Information Act, 2005.

   தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் முக்கிய அம்சங்களை பற்றி விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Departments
துறைகள்

(b) Scientific Management
அறிவியல் சார்ந்த நிர்வாகம்

(c) Budget
நிதிநிலை அறிக்கை

(d) SEBI
செபி

(e) Election Commission
தேர்தல் ஆணையம்

(f) Span of Control
கட்டுப்பாட்டின் வீச்சு

(g) Disaster Management.
பேரிடர் மேலாண்மை.

PART D — (6 × 2 = 12 marks)

8. Answer SIX of the following briefly :
பின்வருவனவற்றுள் ஆறினுக்கு சுருக்கமாக விடையளிக்கவும் :

(a) Hierarchy.
படிநிலை.

(b) Woodrow Wilson.
உட்ரோ வில்சன்.

(c) Staffing.
பணியாட்கள்.

(d) National Human Rights Commission.
தேசீய மனித உரிமைகள் ஆணையம்.

(e) Tribunal.
தீர்ப்பாயம்.

(f) Centralised Administration .
மையப்படுத்தப்பட்ட நிர்வாகம்.

(g) Middle Management.
இடைநிலை மேலாண்மை.

(h) Luther Gullick.
லூதர் கல்லிக்.

Register No. [ ]

**FA5B**

**6903–25**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

JURISPRUDENCE

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : 2½ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain Salmond's theory of law.

   சால்மண்டின் சட்டக் கருத்தியலை விளக்குக.

2. Critically examine the Sociological school of jurisprudence.

   சட்டவியலில் சமூகவியல் பயில் நெறியத்தினை விமர்சனரீதியாக ஆராயவும்.

3. Define Legal right and explain various kinds of rights.

   சட்ட உரிமைகளை வரையறை செய்து அதன் வகைகளை விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define "ownership". Discuss the elements of ownership.

   "சொத்துரிமை" வரையறு. சொத்துரிமையின் கூறுகளைப் பற்றி விவாதிக்கவும்.

5. Define "Possession". Explain the kinds of possession.

   "உடைமையை" வரையறு. உடைமையின் வகைகளை விளக்குக.

6. What are the essential elements of state?

   அரசின் முக்கியக் கூறுகள் யாவை?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Rights in re propria

தன் சொத்தின் மீதான உரிமைகள்

(b) Legal status of unborn child

கருநிலையரின் சட்ட நிலை

(c) Title

உரிமை மூலம்

(d) Legislation

இயற்றுமுறைச் சட்டம்

(e) Obligation

கடப்பாடு

(f) Stare decisis

முன்தீர்ப்பு கோட்பாடு

(g) Administration of justice.

நீதி நிருவாகம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. "X" wants to write a "will" to transfer his property to his pet animal. Is this valid?

"X" தன் செல்லப்பிராணிக்கு "உயில் சாசனம்" வாயிலாக தன் சொத்தை மாற்றம் செய்ய விரும்புகிறார். இந்தச் செயல் செல்லத்தக்கதா?

9. 'A' knowingly lends his vicious horse to 'B' without disclosing this to 'B', who got injured by it. What is the liability of 'A'?

'அ' தன்னுடையது திமிர்பிடித்த அடங்காத குதிரை என்று தெரிந்தும் அதனை தெரியப்படுத்தாமல் 'ஆ'-விற்கு கொடுக்கிறார். 'ஆ' அதனால் காயப்படுகிறார். 'அ' வின் பொறுப்பு நிலை என்ன?

10. The defendant's cat strayed into the plaintiff's land and there it killed thirteen pigeons and two bantams-Decide.

வாதியின் நிலத்தினுள் அத்துமீறி நுழைந்த பிரதிவாதியின் பூனை அங்கிருந்த 13 புறாக்களையும் இரண்டு சண்டைக் கோழிகளையும் கொன்றுவிட்டது. தீர்மானிக்கவும்.

---

Register No. | | | | | | | | |

**FA5C** **6904–25**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

CONSTITUTIONAL LAW — I

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
★ ILLUPPUR - 622102. ★

Time : 2½ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Article 14 forbids class legislation but does not forbid reasonable classification". Explain with decided case laws.

   "உறுப்பு 14, இன வகுப்புச் சட்டத்தை தடுக்கிறதே தவிர நியாயமான வகைப்பாடு செய்வதைத் தடுக்கவில்லை"- தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் விளக்கவும்.

2. The expression 'personal liberty' in Article 21 is of wider amplitude and it covers a variety of rights – Elucidate.

   உறுப்பு 21-ன் கீழ் 'தனி மனித சுதந்திரம்' என்ற வாசகம் பரந்த வீச்சினை உடையது மட்டுமின்றி அது பல உரிமைகளை உள்ளடக்கியதாகும்-தெளிவுபடுத்துக.

3. Examine the scope of the protection against 'Double Jeopardy' under Article 20(2) of the Constitution. Can an accused be compelled to give his thumb impression?

   அரசமைப்புச் சட்டத்தின் 20(2) பிரிவின்படி 'இருமுறைத் தண்டனை'-க்கு எதிரான பாதுகாப்பின் அளவை ஆராய்க. ஒரு குற்றம் சாட்டப்பட்டவர் தனது கட்டை விரல் சுவட்டின் பதிப்பை அளிக்கும்படி வற்புறுத்தப்படலாமா?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Examine the contents of the Preamble of the Indian Constitution. Can Preamble be altered or amended?

   இந்திய அரசமைப்புச் சட்ட முகப்புரையின் உட்கருத்துகளை ஆராய்க. முகப்புரையை மாற்றவோ திருத்தவோ முடியுமா?

5. Enumerate the directives mentioned under Part-IV of the Constitution.

அரசமைப்புச் சட்டத்தின் பகுதி நான்கில் கொடுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளை வரிசையாக பட்டியலிடுக.

6. Discuss the scope of Article 15 of the Indian Constitution with judicial decisions.

இந்திய அரசமைப்புச் சட்டம் 15-வது உறுப்பின் அளாவுகையை நீதிமன்ற தீர்ப்புகளோடு விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Judicial Review

நீதிமன்ற மறு ஆய்வு

(b) Formation of new states

புதிய மாநிலங்களை உருவாக்குதல்

(c) Fundamental Duties

அடிப்படை கடமைகள்

(d) Secularism

மதச்சார்பின்மை

(e) Freedom of profession

தொழிற்சுதந்திரம்

(f) Other authorities

இதர-அதிகார அமைப்புகள்

(g) Ex post facto law.

பின்வரு செயல் சட்டம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A State Government issued a Government Order stating the rules to be followed in admitting students to minority run unaided educational institutions. The management of the minority institutions challenged the Government Order on the ground that it violated their right under Article 30. Decide.

சிறுபான்மையினர் நடத்தும் அரசு நிதி உதவி பெறாத கல்வி நிறுவனங்களின் மாணவர் சேர்க்கையில் பின்பற்றிட வேண்டிய விதிகளைக் குறிப்பிட்டு ஒரு மாநில அரசு அரசாணை ஒன்று வெளியிட்டது. இந்த அரசாணை அரசமைப்பின் உறுப்பு 30-ன் கீழ் தங்களது அடிப்படை உரிமையினை மீறுவதாக உள்ளது என்று கல்வி நிறுவனங்களின் நிர்வாகம் வாதிட்டது. தீர்மானிக்க.

9. 'A' was sentenced to death but it was not executed for 10 years. 'A' filed a writ seeking to quash the death sentence. Will he succeed? Decide.

'A' என்பவருக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டு 10 ஆண்டுகளாகியும் நிறைவேற்றப்படவில்லை. 'A' ஒரு நீதிப்பேராணையை தாக்கல் செய்து தனக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று வாதிடுகிறார். அவர் வெற்றி பெறுவாரா? தீர்மானிக்கவும்.

10. Anand, a person of Indian origin, voluntarily acquires the citizenship of another country. Meanwhile in the country, in which he acquired a citizenship, a civil war broke out and he was forced to come back to India. Decide Anand's citizenship.

ஆனந்த், என்ற இந்திய பூர்வீக நபர் தன் விருப்பத்தின் பேரில் வேறு ஒரு நாட்டின் குடியுரிமையைப் பெற்றார். இதற்கிடையில், அவர் குடியுரிமை பெற்ற நாட்டில் உள்நாட்டுப் போர் மூண்டது. அதனால் அவர் கட்டாயமாக இந்தியாவிற்கு திருப்பி அனுப்பப்படுகிறார். அவரின் குடியுரிமையை தீர்மானிக்கவும்.

---

Register No. | | | | | | | | |

# FA5D

**6905–25**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

LAW OF PROPERTY

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours — Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the Doctrine of Election.

   தேர்வு கொளல் கோட்பாட்டினை விவரி.

2. What are the rules relating to transfer of property in favour of unborn persons?

   பிறக்கப்போகும் குழந்தைகளின் நன்மைகளுக்காக ஏற்படுத்தப்படும் உரிமைமாற்றங்களில் கையாளப்பட வேண்டிய விதிகள் யாவை?

3. Explain about the law of Attestation.

   'சான்றுக் கையொப்பமிடல்' சட்டத்தினை விவரி.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the various kinds of mortgage.

   அடைமானத்தின் பல்வேறு வகைகளை விளக்குக.

5. Define Sale and discuss about the rights and liabilities of seller.

   விற்பனையை வரையறுத்து விற்பவரின் உரிமை மற்றும் கடப்பாடுகளை விவரி.

6. Define Easement. Distinguish it from licence.

   வசதியுரிமையை விளக்குக. அதனை உரிமத்திலிருந்து வேறுபடுத்துக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Immovable Property.

அசையா சொத்து.

(b) Oral Transfer.

வாய்மொழி உரிமை மாற்றம்.

(c) Constructive notice.

கொள்நிலை அறிவிக்கை.

(d) Charge.

பொருட்பிணை பொறுப்பு.

(e) Universal Donee.

முழுதளாவிய கொடை பெறுநர்.

(f) Contract of sale.

விற்பனை ஒப்பந்தம்.

(g) Restrictive covenant.

கட்டுப்படுத்தும் வரைமொழி ஒப்பந்தம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Akash gifted his house and also Rs. Twenty lakhs to be earned by him in future to Surya. To what extent the gift is valid?

ஆகாஷ் என்பவர் தன்னிடமுள்ள வீட்டையும் எதிர்காலத்தில் தன்னால் சம்பாதிக்கப்படும் ரூபாய் இருபது லட்சமும் சேர்த்து சூர்யா என்பவருக்கு தானமாக வழங்குகிறார். எந்த அளவுக்கு இந்தத் தானம் செல்லுபடியாகும்?

9. Anbu purchased property in the name of Kannan. Kannan sold the property to Tarun. Anbu sues to recover the property from Tarun. Decide.

அன்பு என்பவர் கண்ணன் என்பவரின் பெயரில் சொத்து வாங்கினார். கண்ணன் என்பவர் தருண் என்பவருக்கு சொத்தை விற்று விட்டார். தருணுடைய சொத்தைப் பெற அன்பு என்பவர் வழக்கிடுகிறார். தீர்மானிக்கவும்.

10. Vijay agrees to sell a house to Rohan and puts Rohan in possession. Before the sale deed is executed Vijay's title is found to be defective. Advise Rohan.

விஜய் என்பவர் ரோஹன் என்பவருக்கு ஒரு வீட்டை விற்க ஒப்புக் கொண்டு ரோஹன் என்பவரிடம் சுவாதீனம் கொடுத்து விடுகிறார். விற்பனை பத்திரம் எழுதும் முன்பு விஜய் என்பவர் அந்த வீட்டின் முழு உரிமையாளர் இல்லை என தெரியவருகிறது. ரோஹனுக்கு அறிவுரை வழங்குக.

Register No. | | | | | | | | |

**FA5F**

**6907–25**

(For the candidates admitted from 2022 – 2023 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

BHARATIYA SAKSHYA ADHINIYAM – 2023

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What facts may not be proved under the BSA, 2023?

   பாரதிய சாட்சிய அதிநியம், 2023ன் கீழ் நிரூபிக்கப்படத் தேவையில்லாத பொருண்மைகள் யாவை?

2. Explain presumption in rape and dowry death cases.

   வன்புணர்ச்சி மற்றும் வரதட்சணை மரண வழக்குகளில் துணிபுகள் பற்றி விளக்குக.

3. When judgment of court is relevant in civil and criminal proceedings as provided in the BSA, 2023.

   2023-ன் பாரதிய சாட்சிய அதிநியத்தின் படி உரிமையியல் மற்றும் குற்றவியல் செயல் முறைகளில் எப்பொழுது நீதிமன்றங்களின் தீர்ப்புரைகள் தொடர்புடையவை ஆகலாம்?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Distinguish between presumption of fact and presumption of law.

   நிகழ்மை துணிபு மற்றும் சட்டத் துணிபு ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்டுக.

5. Explain the provisions of BSA relating to competency of witnesses.

   பாரதிய சாட்சிய அதிநியத்தில் ஓர் சான்றுரைஞரின் தகுதி பற்றி கூறியுள்ள வகையங்களை விளக்குக.

6. Write briefly about burden of proof in criminal cases.

   குற்றவியல் வழக்குகளில் மெய்ப்பிக்கும் சுமை குறித்து குறிப்பு வரைக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Alibi.

வேற்றிட வாதம்.

(b) Retracted Confession.

பின்வாங்கப்பட்ட குற்ற ஏற்புரை.

(c) Patent Ambiguity.

வெளிப்படை பொருள் மயக்கம்.

(d) Hearsay Evidence.

கேள்விநிலை சாட்சியம்.

(e) Disproved.

பொய்ப்பிக்கப்பட்டது.

(f) Privileged Communication.

காப்புடை செய்திகள்.

(g) Res gestae.

ஒன்றியச் செயல்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' is charged for shooting at 'B' with intent to kill him. Whether A's intent may be proved by fact of 'A' having previously shot at B?

'A' என்பவர் 'B'யை கொலை செய்யும் எண்ணத்தோடு சுட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளார். 'A' ஏற்கனவே 'B'–யை சுட்டுள்ளார் என்ற பொருண்மையை வைத்து 'A'யின் குற்ற மனதை நிரூபிக்க இயலுமா?

9. A prosecutes B for theft and wishes the court of believe that B admitted the theft to C. Who must prove the admission?

திருட்டுக் குற்றத்திற்காக B என்பவர் மீது A என்பவர் குற்ற வழக்குத் தொடுக்கிறார் மற்றும் C என்பவரிடம் திருட்டை பற்றி B ஒப்புக் கொண்டுள்ளார் என நீதிமன்றம் நம்ப வேண்டும் என 'A' விரும்புகிறார். அந்த ஏற்புரையை யார் மெய்ப்பிக்க வேண்டும்?

10. 'A' is accused before the Court of Sessions for having given false evidence before 'B' a Magistrate. Can 'B' be compelled to depose what A had said to him?

'B' என்ற குற்றவியல் நீதிமன்ற நடுவர் முன்பு பொய் சான்று அளித்ததற்காக A என்பவர் அமர்வு நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். A என்ன கூறினார் எனக் கூறும்படி 'B'யைக் கட்டாயப்படுத்த முடியுமா?

---